**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102192

1. District : Chennai PS: V & Ac Chennai City-I Unit. Year: 2022 FIR No.: 6/22 Date: 25.7.2022
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: U/s 7 of PC (Amendment) Act-2018.
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 12.7.2022 Date to : 22.7.2022.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 22.7.2022 Time : 17.00 Hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ ~~Oral~~ : Written.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: VAO office, Uthandi Panchayat. 23 km East.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Rajesh (b) Father's/ Husband's Name : M.Krishnamoorthy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 38yrs (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Agarpatti manufacture (g) Address : 1/20 Bajanai koil Street, Uthandi, Chennai-119.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Ramesh Village Administrative officer VAO office, Uthandi Panchayat.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
NO Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet is Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Rajiv 25.07.22 [signature] 25/7/2022

14. Signature / Thump Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 25.7.2022
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Pandaraswamy
Rank: நிலை Inspector of Police, No. எண்
V&AC CC-I, Alandur, Chennai

FIR continuation to coloumn No.12 of FIR in Cr.No.6/AC/2022/CC-I

22.07.2022-ந் தேதி 17.00 மணியளவில் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை. சென்னை நகர பிரிவு-1-ன் காவல் ஆய்வாளர் S. பண்டாரசுவாமி ஆகிய நான் அலுவலகத்தில் பணியிலிருந்த போது சென்னை-119 உத்தண்டி பஜனை கோயில் தெரு எண் 1/120-ல் வசிக்கும் திரு.K.ராஜேஸ். த/பெ. M. கிருஷ்ணமூர்த்தி என்பவர் அலுவலகம் வந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை மேற்கொண்டு இன்று 25.07.2022-ம் தேதி காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- தேதி 22.07.2022 அனுப்புநர் K.ராஜேஸ். S/o. M. கிருஷ்ணமூர்த்தி. No.1/120 பஜனை கோயில் தெரு உத்தண்டி சென்னை-600119 பெறுநர் காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலந்தூர் சென்னை-16 அய்யா நான் உத்தண்டி. பஜனை கோயில் தெரு. எண் 1/120 என்ற முகவரியில் வாடகை வீட்டில் கடந்த 7 மாதமாக குடியிருந்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர்கள் 2 அண்ணன்கள் K.வெங்கடேசன் மற்றும் K.தினேஸ். எனது அப்பா கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார். அம்மா K.பங்கஜம் என்னுடன் குடியிருந்து வருகிறார். உத்தண்டி கிழக்கு கடற்கரை சாலை எண் 2/113 எனது அம்மா பெயரில் இருந்த வீடு உடன் கூடிய இடத்தை டிசம்பர் 2021-ல் விற்றுவிட்டு அந்த தொகையை கொண்டு உத்தண்டி கிராமம் செங்கேணி அம்மன் கோயில் தெருவில் சர்வே எண் 100/2, 100/3B1-ல் கண்ட 3 கிரவுண்ட் காலி இடத்தை வாங்கினோம் அந்த இடத்தை எனது பெயரிலும் எனது அண்ணன்கள் வெங்கடேசன் மற்றும் தினேஷ் ஆகிய மூன்று பேர்கள் பெயரிலும் டாக்குமெண்ட் எண் 5520/2022, 5522/2022-ன் படி நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம். அதன்பிறகு சகோதரர்கள் நாங்கள் மூன்று பேரும் தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் ஒரு கிரவுண்ட் என்ற முறையில் பாகபிரிவினை செய்து கொண்டு டாக்குமெண்ட் எண் 6963-ன் படி 11.06.2022 ஆம் தேதி நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தோம். 01.07.2022 ஆம் தேதி நாங்கள் பாகபிரிவினை செய்த மேற்படி இடத்திற்கு எங்களது பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு உத்தண்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.ரமேஷ் என்பவரை சந்தித்து ஆவண நகல்களை கொடுத்தேன். 04.07.2022 ஆம் தேதி மீண்டும் அவரை சந்தித்து எங்களது பட்டா சம்மந்தமாக கேட்ட போது இசேவை மையத்தில் விண்ணப்பிக்க கூறினார். அதன் படி 04.07.2022-ம் தேதி சோழிங்கநல்லூர் இசேவை மையத்தில் பட்டாவிற்காக எனக்கும். எனது அண்ணன்கள் திரு.வெங்கடேஷ் மற்றும் திரு.தினேஷ் ஆகிய மூவருக்கும் தனிதனியாக விண்ணப்பித்தேன். எனது அண்ணன்களுக்கான பட்டா மாறுதல் சம்மந்தமான பணியை நானே செய்தேன். பட்டாவிற்காக விண்ணப்பித்து சம்மந்தமாக உத்தண்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.ரமேஷ் அவர்களிடம் தகவலையை தெரிவித்தேன் அவர் ஒரு வாரம் கழித்து வந்து என்னை பார்க்கும் படி கூறினார். 12.07.2022-ம் தேதி நான் கிராம நிர்வாக அலுவலர் திரு.ரமேசை சந்தித்து பட்டா பற்றி கேட்டேன். பட்டா பெறுவதற்கு ரூ.20.000/- செலவாகும் என்றும் 20.000த்தை உடனடியாக ரெடி செய்து என்னிடம் கொடுத்தால் நான் பரிந்துரை செய்து பட்டா பெறுவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். அதற்கு நான் அதிக கடனில் இருப்பதாகவும் அவ்வளவு பெரிய தொகை எங்களால் தர இயலாது என்று கூறினேன். பணம் கொடுத்தால் தான் வேலை ஆகும் என்று கூறினார் நான் உடனே வீட்டிற்கு வந்து விட்டேன். 20.07.2022 ஆம் தேதி அவர் எங்களது இடத்திற்கே வந்து இடத்தை ஆய்வு செய்துவிட்டு பணம் எப்போது ரெடியாகும் உடனே ரெடி பண்ணி ரூபாய் 20.000த்துடன் வந்தால் பட்டா பெறுவதற்கு நான் பரிந்துரை செய்வேன் என்று கூறி சென்று விட்டார். 22.07.2022 ஆம் தேதி உத்தண்டி கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று

திரு.ரமேஷ் அவர்களை சந்தித்து பணம் ரெடி செய்ய சிரமமாக உள்ளது என்று கூறினேன். அதெல்லாம் எனக்கு தெரியாது பணம் ருபாய் 20.000 ரெடி பண்ணி என்னிடம் கொடுத்தால் மட்டுமே உங்களுக்கான பட்டாக்கள் கிடைக்க ஏர்பாடு செய்வேன், இல்லையென்றால் பட்டாக்கள் கிடைக்க வாய்ப்பில்லை என்று சொல்லிவிட்டார். எங்களுக்கு பணம் ருபாய் 20.000 லஞ்சம் கொடுத்து பட்டாக்கள் பெற விருப்பமில்லை. எனவே உத்தண்டி கிராம நிர்வாக அலுவலர் திரு.ரமேஷ். மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன். ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவில் எடுக்கும் நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு தருகிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன் இப்படிக்கு ஒப்பம்22.07.2022. Received the compliant on 22.07.2022 @ 17.00 hrs. After verifying the genuineness of the compliant, complainant and reputation of the accused, I registered a case in V&AC CC-I detachment in Cr.No.6/AC/2022/CC-I, u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 25.07.2022 at 09.00 hrs.

25/7/2022
S. KANDARASWAMY
V & AC, CC-I,
Chennai-16.